©
GOVERNMENT OF TAMIL NADU
2022

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price : Rs. 1.60 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**PUBLISHED BY AUTHORITY**

No. 18] CHENNAI, WEDNESDAY, MAY 4, 2022
Chithirai 21, Subakiruthu, Thiruvalluvar Aandu–2053

# Part VI—Section 3(b)

**Notifications issued by Quasi-Government bodies and Public Sector undertakings.**

## NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

CONTENTS

*Pages.*

**தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.**

தமிழ்ப் பல்கலைக்கழகச் சட்டம் பிரிவு 18(எ) வகுப்பு-II(6) இன் கீழ் பேரவைத் தேர்தல் அறிவிப்பு .. .. .. *22*

TAMIL NADU TRANSMISSION CORPORATION LIMITED

GENERAL CONSTRUCTION CIRCLE-I, CHENNAI

Erection of Transmission Lines .. .. .. .. .. .. 23-24

## NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

**தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.**

**தமிழ்ப் பல்கலைக்கழகச் சட்டம் பிரிவு 18(எ) வகுப்பு-II(6)இன் கீழ் பேரவைத் தேர்தல் அறிவிப்பு**

*(ந.க. எண். 1004/க1/2022)*

No. VI-3(b)/9/2022.

கரந்தைத் தமிழ்ச் சங்க உறுப்பினர்களிலிருந்து தமிழ்ப் பல்கலைக்கழகப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரின் பதவிக்காலம் 28.07.2022 அன்று பிற்பகலுடன் முடிவுறுகிறது. இப்பேரவை உறுப்பினரின் பதவிக்காலம் மேலே குறிப்பிடப்பட்ட நாளில் முடிவுறுவதைத் தொடர்ந்து தமிழ்ப் பல்கலைக்கழகச் சட்டம் பிரிவு 18(எ) வகுப்பு–II(6)இன்படி கரந்தைத் தமிழ்ச் சங்க உறுப்பினர்களிலிருந்து ஒருவரை, தமிழ்ப் பல்கலைக்கழகப் பேரவைக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்க வேண்டியுள்ளது. இவ்வுறுப்பினரின் பதவிக்காலம் மூன்று ஆண்டுகள் அல்லது பேரவை மீண்டும் திருத்தி அமைக்கப்படும் நாள்வரை இவற்றில் எது முந்தியதோ அதுவரையாகும். தேவையெனில் இதற்காக நேரடியான மறைமுக வாக்குப்பதிவு நடைபெறும்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் பத்தி–1இல் நிர்ணயிக்கப்பட்டபடி தங்களுக்குள் நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கையில் வேட்பாளர்களை நியமனம் செய்யலாம். ஒவ்வொரு வேட்பு மனுவும் அதற்குரிய படிவத்தில் எழுத்து மூலமாக அதன் தேர்வாளரால் முன்மொழியப்பட்டு மற்றொரு தேர்வாளரால் வழிமொழியப்பட்டு அமைய வேண்டும். வேட்பு மனுவுடனும் தாம் தேர்ந்தெடுக்கப்பட்டால் பேரவையில் பணியாற்றுவதற்கு இசைவதாக வேட்பாளர் ஒவ்வொருவரும் உறுதிமொழி கூறும் படிவத்தை நிறைவு செய்து கையொப்பம் இட்டு இணைத்தனுப்பவேண்டும்.

காலியிடங்களைப் பொறுத்து ஒவ்வொரு தேர்வாளரும் முன்மொழிபவராகவோ வழிமொழிபவராகவோ இருக்கலாம்.

ஒவ்வொரு வேட்பு மனுவும் ஓர் உறையிலிடப்பட்டு அதன்மேல் "பேரவைக்குக் கரந்தைத் தமிழ்ச் சங்க உறுப்பினர்களிலிருந்து வேட்பாளர் நியமனம்" என்று எழுதப்பட்டு ஒப்புகைச் சீட்டுடன் கூடிய பதிவு அஞ்சலில், பதிவாளர் (பொ) மற்றும் தேர்தல் அலுவலர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்–613 010 என்னும் முகவரிக்கு 23.08.2022 பிற்பகல் 4.00 மணிக்குள் கிடைக்குமாறு அனுப்பவேண்டும். வேட்பு மனுக்களை அலுவலக நேரத்தில் தேர்தல் அலுவலரான இப்பல்கலைக்கழகப் பதிவாளர் (பொ) அவர்களிம் நேரடியாகவோ நபர் மூலமாகவோ குறித்த காலத்திற்குள் கிடைக்குமாறும் அனுப்பி வைக்கலாம்.

மேலே கூறப்பட்டுள்ளபடி முறையாக அனுப்பப்படாத வேட்பு மனுக்கள் செல்லுடமையற்றவை எனச் சாற்றப்படும்.

வேட்பு மனுக்கள் 23.08.2022 பிற்பகல் 5.00 மணிக்குப் பல்கலைக்கழக அலுவலகத்தில் ஆய்வு செய்யப்படும். செல்லுடமையுள்ள வேட்பாளர் பட்டியல் அன்றைய நாளே வெளியிடப்படும்.

எந்த வேட்பாளரும் தம் வேட்பு மனுவை எழுத்து மூலம் அறிவித்துத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். இத்தகைய திரும்பப் பெறும் அறிவிப்பை 01.09.2022 பிற்பகல் 3.00 மணிக்குள் கிடைக்குமாறு பதிவாளர் (பொ) மற்றும் தேர்தல் அலுவலர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்–613 010 என்ற முகவரிக்கு ஒப்புகைச்சீட்டுடன் கூடிய பதிவு அஞ்சலிலோ, மேலே குறித்த நாள் மற்றும் நேரத்திற்குள் தேர்தல் அலுவலரிடம் நேரடியாகவோ ஆள் மூலமாகவோ சேர்ப்பிக்கலாம்.

வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறுவதற்கான நேரம் முடிந்த பிறகு அன்றைய நாளே (01.09.2022 பிற்பகல் 5.00 மணிக்கு) இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும். இறுதி வேட்பாளர் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களைவிடக் கூடுதலாக இருந்தால் 27.09.2022 முற்பகல் 11.00 மணி முதல் பிற்பகல் 4.00 மணி வரையிலுள்ள இடைப்பட்ட நேரத்தில் மந்தண வாக்குப்பதிவு முறையில் தேர்தல் நடத்தப்பட்டு அன்றைய தினமே முடிவு அறிவிக்கப்படும்.

தஞ்சாவூர்,
2022 ஏப்ரல் 29.

**க. சங்கர்,**
*பதிவாளர் (பொறுப்பு).*

TAMIL NADU TRANSMISSION CORPORATION LIMITED

GENERAL CONSTRUCTION CIRCLE-I, CHENNAI

**Erection of Transmission Lines**

*[Lr. No. SE/GCC-I/CNI/AEE/GL/CHD/F. T&D/Notification/D. 206/2022]*

No. VI-3(b)/10/2022.

TAN TRANSCO has sanctioned for erection of the following Transmission Lines to Transmit and Distribute Power so as to meetout additional demands. The work will be takenup shortly.

| *Sl. No.* | *Name of the Transmission Line* | *Route* | *Route Length in KM.* | *Administrative Approval* | |
|---|---|---|---|---|---|
| | | | | *B.P. No.* | *Scheme cost in lakhs* |
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* | *(6)* |
| 1. | Erection of 110 KV DC line on DC tower with Panther conductor from loc. 01 to 09 by making LILO in 110 KV Veerapuram - Thirumani feeder in between line 34 & 35 towards Extension of new EHT supply for a demand of 12000 KVA at 110 KV to M/s. Mando Automotive India Pvt. Ltd., Thennur Village, Chengalpattu District. | 1. Amanampakkam<br>2. Kollamedu<br>3. Elanthoppu<br>4. Patravakkam<br>5. Thennur | 1. 525 | Memo.No.CE/Coml/SE/ EE1/AEE1/F. M/s. Mando Auto/D.249/21, dt. 26.07.2021 | 873.35 |

Any person interested may make representation on the above scheme within 01 (One) month from the date of issue of the publication to the undersigned as per the Electricity Act, 2003.

Chennai-600 032,
28th April 2022.

ER. A. PUSHPANATHAN,
*Superintending Engineer,*
*General Construction Circle-I.*

**தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் லிமிடெட்**
**பொதுக் கட்டுமான வட்டம்-I, சென்னை.**

**அறிவிக்கை**

*[Lr. No. SE/GCC-I/CNI/AEE/GL/CHD/F. T&D/Notification/D. 206/2022]*

**கூடுதல் மின் தேவையை நிறைவு செய்திட தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் லிமிடெட் கீழ்க்கண்ட இடங்களில் மிக உயரழுத்த மின்பாதை அமைத்து விரைவில் பணி துவங்க உள்ளது.**

| *வ. எண்* | *மின்தொடர் வேலையின் விவரம்* | *மின்பாதை செல்லும் வழித்தடம்* | *மின்பாதையின் நீளம் கி.மீ* | *நிர்வாக ஒப்புதல்* | |
|---|---|---|---|---|---|
| | | | | வாரிய ஆணை எண் | *திட்ட மதிப்பீடு இலட்சத்தில்* |
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* | *(5)* | *(6)* |
| 1 | ஏற்கனவே உள்ள வீராபுரம்–திருமணி 110 கி.வோ. மின் பாதையில் இருந்து மேன்டோஅட்டோமோட்டிக் இந்தியா பிரைவேட் லிமிட்டடுக்கு புதியதாக மின் இணைப்பு வழங்க உயர் மின்அழுத்தம் அமைத்து 12000 கி.வோ.ஆ. கோரிக்கையை பூர்த்திசெய்ய இரட்டை சுற்று மின்பாதை அமைக்கும் பணி | 1. அம்மன பாக்கம்<br>2. கோள்ளமேடு<br>3. இளந்தோப்பு<br>4. பட்டரவாக்கம்<br>5. தேன்னூர் | 1.525 | Memo.No.CE/ Coml/SE/EE1/ AEE1/F. M/s. Mando Auto/D.249/21, dt. 26.07.2021 | 873.35 |

மேற்குறிப்பிட்ட பணிகள் குறித்து எவரேனும் முறையீடுகள் தெரிவிக்க விரும்பினால் இந்த அறிக்கை வெளியிடப்பட்ட 01 (ஒன்று) மாதத்திற்குள் கீழே குறிப்பிட்டுள்ள அதிகாரிக்கு மின்சார சட்டம், 2003ன்படி முறையீடு செய்யலாம்.

சென்னை–32,
2022 ஏப்ரல் 28.

Er. A. PUSHPANATHAN,
*மேற்பார்வைப் பொறியாளர்,*
*பொதுக் கட்டுமான வட்டம்–I.*

PRINTED AND PUBLISHED BY THE COMMISSIONER OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU